கர்த்தருக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்திலே வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறேன். நலமாய் இருப்பீர்கள் என நம்புகிறேன்.

உங்களுக்காக தொடர்ந்து ஜெபித்து விவருகிறோம்.

மீள இப்பகுதியில் உங்களை காண தேவன் கிருபை செய்தார். 2024ஆம்ஆண்டு துவங்கி 7 மாதங்களை கடந்த பின்பு இம்மாதத்தையும் வாக்குத்தத்தைக் கொண்டு நடப்போம். தேவன் நிச்சயம் நடத்துவார். கர்த்தருக்கு சித்தமானால் ஆகஸ்டு 15ம் தேதி Retreat நடத்த தீர்மானித்து உள்ளோம்.

**“அழைப்பு”**

வருகிற 02.08.2024 முதல் 04.08.2024 வரை 3 நாட்கள்

**R.N. Function Palace**-ல்

எதுதான் நடக்கும்?

மனுஷனுடைய திட்டமா?

தேவனுடைய சித்தமா?

தலைப்பின் கீழ் நம்முடைய போதகர் விக்டர் விமல் பேசுகிறார். முடிந்தளவுக்கு பங்குபெற்று தேவனை மகிமைப்படுத்துங்கள். பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

உலகின் கடைசி காலத்தில் இருக்கிறோம். வெறும்கையுடன் பரலோகம் செல்லாமல் அவருக்கு பிரியமான “ஆத்தும மீட்புக்கு” பிரயாசப்பட்டு, ஜெபம் செய்து ஆத்துமா ஆதாயத்துடன், அவர் வருகையை எதிர்பார்ப்போம்.

இச்சபையின் ஊழியங்களுக்காக ஊழியர்களுக்காக ஜெபியுங்கள். காலம் இனிச் செல்லாது. கொஞ்சக்காலம்தான் உண்டு என்று அறிந்து சாத்தான் அநேகரை வீழ்த்த, ஊழியரையும் விட்டு வைக்காமல் அவன் கிரியைகளை சபைகளில் திணிக்கிறான். ஜெபியுங்கள். பங்கு பெறுங்கள். “நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்வோம்.”

மீள இப்பகுதியில் சந்திக்கும் வரை தேவ கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

# தேவ அழைப்பும், விசுவாசியின் பார்வையும் பதிலும்

எனக்கருமையான சகோதரரே! சகோதரியே! இந்நாளின் செய்திக்கு கடந்து போவோமாக:

தேவன் ஒரு சிலரை தெரிந்து கொண்டு அழைத்தும் இருக்கிறார். அநேகர் அவர் எதற்காக அழைத்தாரோ அந்த அழைப்பில் நிலை நிற்பதில்லை. ஆனால் வேதம் கூறுகிறது. "தேவன் எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களுமாக்கியுள்ளார். எவர்களை நீதிமானாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" (ரோமர் 8:30) நிச்சமாய் நடத்துவார். அழைத்தவர் உண்மையுள்ளவர்; அவர் அப்படியே செய்வார். (1தெச 5:24) உங்களில் நற்கிரியை தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று அறிவோம் (பிலி 1:5) தேவன் அழைத்த அழைப்பும் கிருபை வரங்களும் என்றும் மாறாதவைகள்(ரோ 11:29) எல்லாம் சரியே. தேவன் அழைத்த அழைப்பை காப்பாற்றிகொள்ள தெரிந்திருக்க வேண்டும்.

ஒரு விசுவாசி தேவ அழைப்பை பெற்றவுடன் அதனை காத்துக் கொள்ள தேவையான 3 காரியங்கள் என்னவென்றால் 1.பார்வை 2.பதில் 3. ஆலோசனை. மேற்கூறியவைகள் தேவனுடைய பார்வையில் சரியாக இருக்குமானால், அவர் அழைத்த அழைப்பும் மாறாதவைகளாய் இருக்கும்.

ஜீவ புஸ்தகத்திலிருந்து பெயரே கிறுக்கிப்போட இயலுமானால் (யாத் 32:32) (சங்.69.28) அழைப்பு என்பது அவருடைய ஈவு என்றே சொல்லலாம். எனவே இப்படிப்பட்ட அழைப்பு எந்த வேளையிலும் வேறு யாருக்காகிலும் போய் சேரலாம். எனவே அழைப்பை பெற்றவரின் பார்வை எப்படியுள்ளது? அவரின் பதில்என்ன? எங்கே? யாரிடம்? ஆலோசனை பெற்றார்கள்? என்பது முக்கியமாகும்.

**அழைப்பு:-**

ஆபிரகாம் "ஒருவனாய் இருக்கையில் நான் அவனை அழைத்து அவனை ஆசீர்வதித்து அவனை பெருகப்பண்ணினேன்"(ஏசா 51:2)

ஒரு மனிதனை தெரிந்து கொண்டு அழைப்பை கொடுக்கும் போது அவனை ஆசீர்வதிக்கிறார். மேலும் அவனை சகல காரியங்களிலும் பெருகப் பண்ணுகிறார். ஆனால் எத்தனையோ பேர் அழைப்பை பெற்றேன் என்கிறார்கள். ஆசீர்வாதம் இல்லாமல்

கஷ்டப்படுகிறதை கண்டும் இருக்கிறேன்.

“ஆரோனைப்போல அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த கனமான ஊழியத்திற்கு தானாய் ஏற்படுகிறதில்லை (எபி 5:4) கேட்க அருமையாக இருக்கிறது.

அழைக்கப்பட்டவர்கள் அநேகர்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் (மத் 20:16) ஆம். தெரிந்து கொள்ளுதலின் அவசியத்தையும், நோக்கத்தையும், உணர்வார்களானால் நிச்சயம் அதற்கு ஏற்றபடி நடக்க இயலும். அப்படிப்பட்டவர்கள் அவருடைய அழைப்பில் முடிவு பரியந்தம் நிலை நிற்பார்கள்.

**அழைப்பின் விவரம்:-**

1. அந்த இரட்சிப்புக்காக உங்களை அழைத்தார் (2 தெச 2:14)
2. பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு (எபி 3:1)
3. நித்திய ஜீவனை பெற்றுக்கொள். அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய். (1தீமோ 6:12)
4. பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற (1கொரி 1:2)
5. அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும் (ரோ 1:1)
6. நீங்கள் சுயாதீனத்திற்கென்று அழைக்கப்பட்டீர்கள் (கலா 5:13)
7. எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். (ரோ 8:30)
8. என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன் (மாற் 1:17)
9. பரம அழைப்பின் பந்தய பொருளுக்காக.( பிலி 3:14)
10. எகிப்திலிருந்து அழைத்துவர மோசேவை தெரிந்துகொண்டு அழைத்தார். (யாத் .3:4)

**பார்வை:-**

தேவன் மோசேவை தெரிந்து கொண்டு உன்னை பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார். அதற்கு பார்வோனிடத்திற்கு போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும் நான் எம்மாத்திரம் என்று தட்டி கழித்தான். காரணம் அவன் 1-வதாக “பார்வோனை பார்த்தான்”

2வதாக “மக்களைப் பார்த்தான்” அவர்கள் (ஜனங்கள்) என்னை நம்பார்கள்; என் வாக்குக்குச் செவிகொடார்கள்.

3வதாக அவன் “தன்னையே பார்த்தான்”

நான் வாக்கு வல்லவன் அல்ல, நான் திக்குவாய் மந்த நாவு

உள்ளவன் என்றான். (யாத் 4:10)

4வதாக "பிறரை பார்த்தான்" ஆண்டவரே, நீர் அனுப்ப சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான். இப்படி அநேகர் கொடுக்கப்படுகிற அழைப்பை புறக்கணிக்க கூடியவர்களாய் உள்ளார்கள்

**பதிலும்:-**

நான் பேச அறியேன். நான் சிறுபிள்ளையாய் இருக்கிறேன் என்கிற எரேமியாவைப் போல (எரே 1:6,7) உள்ளவர்களும் உண்டு. உலகத்தை உண்டாக்கி, மனிதனை உருவாக்கின அவருக்கு தெரியாதா! நாம் சிறுபிள்ளையா? பெரியவனா! என்று. மேசேயின் மாமன் மகனாகிய ஒபா என்பவன் அழைப்பை பெற்ற போது நான் வரக்கூடாது என் தேசத்துக்கும், என் இனத்தாரிடத்திற்கும் போக வேண்டும். (எண் 10.29-31) ஆம் இனஜன பந்தத்தை விடமுடியாது. சொந்த ஊரை விட்டு வெளியே வரமுடியாது என்கிற பதில்.

நான் என் ஊரிலே மரித்து என்தாய் தகப்பன் கல்லறையில் அடக்கம் பண்ணும்படி போகிறேன் என்று பர்சிலா கூறினார். (II சாமு 19:32-37) மரிப்பது நம்முடைய கையில் இல்லை என்பதை பர்சிலா அறியாமல் இருந்தார் போலும்.

அநேகர் பலவிதமான சாக்கு போக்குகளை சொல்லுகிறவர்களாக இருக்கிறார்கள். 'ஒருவன் வயலை வாங்கியிருக்கிறேன் அவசியம் அதைப் பார்க்க வேண்டும் என்றான். வேறொருவன் ஐந்தேர் மாடுகளைக் கொண்டேன் என்றான். வேறொருவன் பெண்ணை விவாகம் பண்ணியுள்ளேன். அதனால் நான் வரக்கூடாது என்றான்' (லூக் 14:18-20) இன்னொருவன் நீர் கடினமுள்ள மனுஷன் என்று சொன்னான். (மத் 25:24) இப்படித்தான் அநேகர் சாக்கு போக்கு கூறுகிறவர்களாயும், தேவனுக்குப் பிரியமற்ற வார்த்தைகளைப் பேசுகிறவர்களாயும் இருக்கிறார்கள். அதனால் தேவன் அழைப்பை இழக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

**பலன்:-**

அழைப்பைப் பெற்ற பிறகு மனிதன் பார்க்கும் வித்தியாச பார்வைக்கும், அவன் கொடுக்கிற பதிலுக்கும், அவனுக்கு தேவனிடத்திலிருந்து கிடைக்கக் கூடிய பலன் என்ன என்று பார்ப்போமாக. ஆபிரகாமின் அழைப்பைப் பெற்று உடன் வந்த லோத் ஆரம்பத்திலே ஆபிரகாமுக்கு, உரிய ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்தும் அவன் முடிவு என்ன ஆனது என்று பார்க்கும் பொழுது, செழுமை என்கின்றது தன் கண் முன் பட்டது. ஆனால், லோத் தன் கண்களை ஏறெடுத்து ஏதேன் தோட்டத்தைப் போல காணப்பட்ட யோர்தான் நதிக்கு அருகாமையில்

காணப்பட்ட சமபூமியைத் தேர்ந்தெடுத்தான். அது கர்த்தர் சோதாம் கோமோரா பட்டணத்தை அழிக்கும் முன்பு செழுமையாய் இருந்தது. கடைசியில் அவன் தங்கின பட்டணம் அக்கினிக்கு இரையானது. அவனுடைய சந்ததி பாவ சந்ததியாக வந்தது. ஏனென்றால் அவன் பார்த்த உலக பார்வை செழுமையை நோக்கி இருந்தது. (ஆதி 13 மற்றும் 19-ஆம் அதிகாரம்)

ராணி வஸ்திக்கு கிடைத்திருந்த மேன்மையை அவள் இழந்தாள் இழந்தால் என்றால், தன் அழகைக் குறித்ததான பார்வையும், கீழ்படியாமையுமே காரணமாயிருந்தது. (எஸ் 1:10,19) அதுபோன்று எலியா தீர்க்கதரிசி தான் ஒருவன் மாத்திரம் தான் இருப்பதாக நினைத்து தேவனிடத்தில் முறையிட்டான். இப்படி பதில் கொடுக்கிறதற்குக் காரணம், அவன் ஆகாப் ராஜாவின் மனைவி யெசபேலைப் பார்த்து பயந்ததினிமித்தமாகத் தான். அதினிமித்தம் தனக்கு உண்டான அந்தஸ்தையும், மேன்மையும் இழந்தான். அவன் பதவி எலிசாவுக்குப் போனது.

**சாட்சி:-**

இன்று இச் செய்தியை எழுதிக் கொண்டிருக்கிற அடியேனுக்கு கிடைத்த இந்த கனமான ஊழியம், முன்பு என் இளைய சகோதரனுக்கு கிடைத்தது என்று சொன்னால் மிகையாகாது. சிறு வயதிலிருந்தே அநேக சொப்பனங்கள், தரிசனங்கள் கிடைக்கப் பெற்று அது நடந்தேறுகிறதைக் காணும்போது யாவருக்கும் வியப்பாய் இருந்தது. காரணம், நாங்கள் ஒரு இந்து குடும்பத்தைச் சார்ந்தவர்கள். சூழ்நிலைகளும் சரியான ஆலோசனைகளும் இல்லாததினாலும், தேவனுடைய அழைப்பு இன்னதென்று தெரியாமல், மறந்து ஜீவித்ததினால் அவன் (என் தம்பி) அழைப்பை இழக்க நேர்ந்தது. பல ஆண்டுகளுக்கு பிறகு, தேவன் எனக்கு தரிசனம் காட்டி அழைத்த போது, இதோ அடியேன் இருக்கிறேன் என்று என்னை ஒப்புக்கொடுத்தேன். இன்று அநேக பல ஆயிரகணக்கான ஜனங்களுக்கு பிரயோஜனமுள்ள போதகனாய், ஒரு தீர்க்கதரிசியாய் தேவன் பயன் படுத்தி வருகிறார்.

மெய்யான சாட்சியை பகிர்ந்து கொள்ளுகிறேன். என் சபையில் அநேகர் அழைப்பைப் பெற்றிருந்தும் அதற்கான தீர்க்கமான வெளிப்பாட்டையும் தரிசனத்தையும் கர்த்தர் என் மூலமாக பேசியிருந்தும் அசட்டை செய்தவர்கள் உண்டு. சாக்கு போக்கு சொல்லி அழைப்பை இழந்தவர்களும் உண்டு. பசுமையையும் பணத்தையும் பார்த்து பின் வாங்கிப் போனவர்கள் அநேகர் உண்டு. அதில் முக்கியமாக மேட்டிமையான பார்வை, அகந்தையான எண்ணம், மாம்ச சிந்தையையுடையவர்களாய் மாறிப்போன சாட்சியைக் குறிப்பிடுவது

அவசியமாய் இருக்கிறது. வயது முதிர்ந்த ஒரு பெரியவர் என் சபையில் பல வருடங்களாக வந்து கொண்டிருந்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு பிள்ளைகள் இரட்சிப்பைப் பெற்று சபையில் வந்துபோது, ஒரு விசை தேவன் அவருடைய மகனைக் குறித்ததான வெளிப்பாட்டைக் கொடுத்தார். 'உன்னை உயர்த்துகிற காலம் வந்தது. நீ வெளிநாடு சென்று உன் குடும்பத்தை மேன்மைப்படுத்துவாய், ஆசீர்வதிக்கப்படுவாய் என்று கூறினார். இந்த தீர்க்கதரிசனமானது, நிபந்தனையோடு கூடிய வெளிப்பாடாகும். 'நீ தேவனுக்குப் பயந்து கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவாயானால், மேற்கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறும்' என்றார்.தேவன் கூறியவண்ணமாகவே, ஓரிரு மாதங்களிலேயே அயல் நாட்டின் வேலைக்கான நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்றான். ஆனால், அதற்குள்ளாக மேட்டிமையான பார்வையும் அகந்தையான பேச்சும், மற்றவர்களை உதாசீனபடுத்துகிற போக்கும் அந்த வாலிபனிடத்தில் மேலிடத்துவங்கியது. அந்த சகோதரனின் தகப்பனார், ஊழியரான என்னிடத்தில் வந்து, ஐயா என்னுடைய மகன் வீட்டிலே என்னிடத்தில் தகராறு செய்யக் கூடியவனாய் இருக்கிறான். இவ்வளவு காலமாக சபைக்குப் போகிறாயே, உன்னைக் (தகப்பனாகிய என்னை) குறித்து கர்த்தர் ஏதாகிலும் பேசியிருப்பாரா? என்னைக் குறித்து பேசினதினாலே, நான் எவ்வளவு விசேஷித்தவன் என்று தெரிகிறதா? வேலை கிடைத்து நான் அயல்நாடு போகட்டும். உங்களைப் பார்த்துக் கொள்கிறேன். நானும் என் மனைவியும் தனிக் குடித்தனம் போய் விடுவோம். நீ என்னிடம் வந்து உதவி கேட்கிற அளவுக்கு என்னை உயர்த்தினார் என்கின்ற அகந்தையான ஆணவப் பேச்சைக் குறித்து என்னிடம் கூறினார். இதனை தேவனும் கேட்டுள்ளார். அந்த சகோதரன் மற்றவர்களைப் பார்த்த மேட்டிமையான பார்வைக்கும் அகந்தையான பேச்சுக்கும் பதில் சீக்கிரத்திலேயே கிடைத்தது. கொடுத்த அழைப்பும் மேன்மையும் பறி போய் கர்த்தர் தீர்க்கமாய் சபையிலே பேசினார். 'சகோதரனே, உனக்கு கொடுக்கப்பட்ட மேன்மையை நீ இழந்தாய் உன் வாயின் வார்த்தையினாலே நீ சிக்குண்டாய். உன்னுடைய பயணம் உனக்கு தூரமாய் இருப்பதாக. இது நாள் வரைக்கும் அதாவது பல ஆண்டுகளாயும் அவர்கள் பல முயற்சிகளை எடுத்தும் அயல்நாட்டில் பணி புரிய முடியாமல் போனது. இது ஒரு ஜீவனுள்ள சாட்சியாக மற்றவர்களுக்கு முன்பாக உள்ளது. இன்னும் பலப்பல சாட்சிகள் உண்டு. இதைக் குறித்தான ஒரு விழிப்புணர்வு எங்கள் சபை மக்களிடையே அதிகம் உள்ளது.

**ஆலோசனை:-**

ஒரு விசுவாசி தேவனுடைய அழைப்பைப் பெறும் பொழுது, அவைகளைக் குறித்து உட்கார்ந்து சிந்திக்க வேண்டும். அவசரப்பட்டு

எந்த பதிலும் தேவனுக்கு முன்பாகக் கூறக் கூடாது. நம்முடைய பார்வையிலே மேட்டிமையான பார்வையும் பெருமைக்குரிய எந்தப் பேச்சும் நம்மில் காணப்படக் கூடாது. மரியாளுக்கு தேவதூதர்களால் கூறப்பட்ட செய்தியைக் குறித்து, இது எப்படி ஆகுமோ? என்று சிந்தனை பண்ணி ஒப்புக் கொடுத்த பெண்மணியாய் இருந்ததினால், இயேசுவைப் பெற்றெடுக்கும் பாக்கியத் தாயாய் எல்லாராலும் இன்று வரை போற்றப்படுகின்ற மதிப்பிற்குரிய வணக்கத்திற்குரியவராய் மாறிப்போனார்.

மேலும், அழைப்பை பெற்ற ஒரு விசுவாசி தன்னடக்கம் உடையவராய் இருந்து தன்னைத் தானே பார்த்துக் கொள்கிற பார்வையிலும், மற்றவர்களைப் பார்க்கிற பார்வையிலும் தாழ்மை பொருந்தின பார்வையை உடையவராய் இருக்க வேண்டும். பிற்பாடு அழைப்பைக் குறித்ததான காரியத்தில், ஆலோசனை பெறுதல் மிக முக்கியமானது அதை யாரிடம்? எங்கே? எப்பொழுது? எப்படிப்பட்டவர்களிடம்? பெற வேண்டும் என்பது மிக முக்கியமானது. முதிர்ந்த அனுபவம் உள்ள தேவனுக்குப் பயந்த, தேவப்பணிகளை செய்துவருகிற ஊழியரிடம் பெற வேண்டும். அதிலும், இவன் வளர்ந்து விட்டால், நம்முடைய பிழைப்பு எப்படி என்று பொறாமை உள்ள நெஞ்சங்களிடம் பெறக்கூடாது. பாஸ்டர், பெரியவர்களிடத்தில் ஆலோசனை பெறவேண்டும் என்று சென்னீர்கள். அதினால், இரட்சிப்பைப் பெறாத, அழைப்பு இன்னதென்று தெரியாத, தேவப்பணியென்றால் இன்னதென்று புரியாத என் தாத்தா ஒருவர் இருக்கிறார். என் தகப்பனார் ஒருவர் இருக்கிறார்; என் பாட்டி ஒருவர் இருக்கிறார் அவரிடத்தில் ஆலோசனை பெறுகிறேன் என்று பெறப்போகிறீர்கள் "பெரியோரெல்லாம் ஞானிகளல்ல முதியோரெல்லாம் நீதியை அறிந்தவர்களுமல்ல" ( யோபு 32:9) பெரியோரையும், முதியோரைப் பற்றியும் இப்படி கூறியதால் என்னையொத்த வாலிபர்களிடம் பெறட்டுமா என்று " வெச்சா குடுமி சிரைத்தால் மொட்டை" என்கிறபடி நடக்கக் கூடாது.

சிலருடைய ஆலோசனைகள் நலமானதைப் போல தோன்றும். ஊக்குவிக்க கூடியதாய் இருக்கும் மோசேயிடம் பார்வோன் பேசும்போது, நீங்கள் வனாந்தரத்திற்கு போய் பலியிடவேண்டாம். பார்த்து பத்திரம். மனைவி, பிள்ளைகள், பெரியவர்கள் எல்லாரும் இங்கேயே இருக்கட்டும். புருஷர்கள் மட்டும் போய் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பலியிட்டு வாருங்கள் என்று முதலை கண்ணீர் விட்டான் பாருங்களேன். (யாத் 8:28, 10:8-12)

அதுபோன்று, மோசேவின் மாமன் கூறிய ஆலோசனையை

பார்க்கும்போது, தேவனுக்கு தெரியாத ஒன்றை இவன் கூறுகிறதை பார்க்கும் போது விந்தையாயிருக்கிறது.

“நீர் ஒருவராய் அதை செய்ய உம்மால் கூடாது. நீர் செய்கிற காரியம் நல்லதல்ல” (எண் 18:17,18) அப்பொழுது மோசேவுக்கு தன் மாமன் கூறின இந்த வார்த்தை மனதில் ஆழமாய் பதிந்தபடியால் தேவனையே எதிர்த்து பேசும் அளவுக்கு மாறியது. எண் 11:11-யினை வாசிக்கும்போது “கர்த்தரை நோக்கி நீர் இந்த ஜனங்கள் எல்லாருடைய பாரத்தையும் என் மேல் சுமத்தினதினால், உமது அடியானுக்கு உபத்திரவத்தை வரப்பண்ணின தென்ன? உம்முடைய கண்களில் எனக்கு கிருபை கிடையாதே போனதென்ன?”

பார்த்தீர்களா! தேவனிடம் பேசுகிற பேச்சா இது?

சாலொமோனின் மகன் ரெகாபெயாம் முதியோர் கூறின ஆலோசனையை தள்ளிவிட்டு தன்னோடு வளர்ந்து தன் சமூகத்தில் நிற்கிற வாலிபரோடு ஆலோசனை பண்ணினான். அதினால் ஜனங்களோடு பேசும்போது திமிர்தனமான பேச்சு. “என் சுண்டு விரல் என் தகப்பனுடைய இடுப்பைப் பார்க்கிலும் பருமனாயிருக்கும்” என்று ஜனங்கள் மீது நுகத்தை பாரமாக்குவேன் நான் தண்டிப்பேன் என்கிறான். (1இரா 12:6-11) அவனுடைய நாட்களில் எல்லாம் யுத்தம் நடந்து கொண்டேயிருந்து அவனும் மரித்துப்போனான் (1 இரா 14:30,31) சரியானவர்களிடம், தேவசித்தப்படி நடக்கும்படி ஆலோசனை கூறுகிறவர்களிடம் ஆலோசனை பெறாவிடில் இப்படிதான் கலக்கமும், யுத்தமும் நடைபெறும்.

**சரியான ஆலோசனை:-**

ஆசாரியனாகிய ஏலி இருந்தார். தனக்கு பிள்ளைகள் இருந்தார்கள். தன் ஸ்தானத்தில் பிள்ளைகள் தலைமுறை தலைமுறையாக வருவதாக தேவன் வாக்குக் கொடுத்திருந்தும் (1சாமு 2:30) தன் பிள்ளையில்லாதிருந்தும் சாமுவேலை மிகத் தெளிவாக, சரியானபடி நடத்துகிறார். “பிள்ளையாண்டவனுடன் தேவன் பேசுகிறார் என்று அறிந்து, நீ போய் படுத்துக்கொள். உன்னை கூப்பிட்டால் கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல் என்றான்.

ஆம்! முறைப்படி நடத்தினார். அதினால் அவன் சமஸ்த இஸ்ரவேலுக்கு ஒரு தீர்க்கதரிசியாயும், நியாயாதிபதியாயும் இருந்தான் (1 சாமு 3:1-10, 19, 20, 21) 1.நடத்தினவர் ஒரு ஆசாரியன், 2. வயதில் மூத்தவர், 3.அனுபவம் பெற்றவர். 4.சுய நலம் அற்றவர், 5.பொறாமையில்லாதவர். (தனக்கு பின் தன் பிள்ளைகள் வரவேண்டிய இடமாயிற்றே என்று நினைக்கவில்லை) 6.தேவனுக்கு பயந்து நடந்தவர்.

ஆம் இப்படிப்பட்டவர்களிடம் ஆலோசனையும் அறிவுரையும் பெற்றால் நீங்கள் பெற்ற அழைப்பில் நிலைவரப்படுவீர்கள்.

எனக்கருமையான சகோதரனே! சகோதரியே! தேவன் அழைத்த அழைப்பும் கிருபை வரங்களும் மாறதவைகள் என்று எண்ணி கோட்டை விட்டு அழைப்பை இழந்துவிடாதீர்கள்.

ஜீவ புஸ்தகத்தில் பெயரை எழுதினவருக்கு கிறுக்கிப் போடவும் தெரியும் என்பதை புரிந்து கொள்ளுங்கள். அழைப்பை பெற்றேன் என்று இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக ஆளவேண்டாம் (1பேதுரு 5:3) உங்கள் பார்வையும் (மேட்டிமையாக இல்லாமல்) பேச்சும் (அகந்தையோடு இல்லாமல்) மிக முக்கியமானது. தேவனுடைய அழைப்பில் நிலை நிற்க. அதாவது "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்" (1கொரி 10:12)

எனவே பார்வையும், பேச்சும் அடக்கமாயும், தாழ்மையோடு இருந்தாலும் உங்கள் அழைப்பை காத்துக்கொள்ள நல்லதொரு ஆலோசனைக்காரர் அவசியம் தேவை. சாமுவேலுக்கு கிடைத்த ஏலி தாத்தா போல் ஒரு பெரியவர் தேவை. எனவே முதியவர்களிடம், அதாவது ஊழியரிடம் (பொறாமைகொள்ளாத) ஆலோசனை பெறுதல் வேண்டும்.

"ஆலோசனையினால் எண்ணங்கள் ஸ்திரப்படும்" (நீதி 20:18)


"ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள்" (நீதி 11:14)

ஆலோசனைக்காரர் இருந்தால், சுகம்(நீதி 11:14)சமாதானம் (நீதி 12:20) ஜெயம் கிடைக்கும் (நீதி 24:6)


உங்கள் அழைப்பில் நிலைகொள்ள உறுதிப்படுத்திக்கொள்ள ஆலோசனை நிச்சயம் தேவை. எனவே கர்த்தருடைய பிள்ளையே தேவனுடைய அழைப்பை பெற்றிருப்பாயானால் உன் பார்வை எப்படி உள்ளது. உனக்கு ஆலோசனை கொடுப்பவர்கள் யார்? எங்கே உள்ளவர்கள்? எப்படிப் பட்டவர்கள்? வயதில் பெரியவரா? (அ) உன் வயதுக்கு ஒத்தவரா? வாலிபரா? சிந்தித்து செயல்பட்டால் தேவன் அழைத்த, அழைப்பில் நிலைவரப்படுவீர்கள். ஆமென்! அல்லேலூயா!

## ஆகஸ்ட் 2024 மாதத்திற்கான வாக்குத்தத்தம்

*"இதோ நான் உங்களை புறஜாதிகளுக்குள்ளே நிந்தையாக வைக்காமல், உங்களுக்குத் தானியத்தையும், திராட்சரசத்தையும் எண்ணெயையும் கொடுத்தேன். அதினால் திருப்தியாவீர்கள்."* **(யோவேல். 2 : 19)**



# கண்டவைகளும் கேட்டவைகளும்



## சொன்னபடியே

என் பெயர் லாரன்ஸ். நான் காலைத்தியான கூட்டத்தில் பாஸ்டர் மூலமாக ஜுலை 1ஆம்தேதி பேசிய வெளிப்பாட்டில் உங்கள் தேவைகளை (அ) எதிர்பார்த்தல் எதுவோ அதை கரும்பலகையில் எழுதிவைத்துவிட்டு அதற்காக ஜெபியுங்கள் என்றார். ஜெபித்தேன். கர்த்தர் நான் குறிப்பிட்ட இரண்டு காரியங்களை உடனுக்குடன் நிறைவேற்றினார். தேவனுக்கு நன்றி.

**சகோ. லாரன்ஸ்** - வேலூர்.

## ஜெபத்தை கேட்பவர்

என் பெயர் கலா. எனக்கு cancer என்று கூறி Treatment எடுத்தேன். இருப்பினும் படுத்த படுக்கையாகி விட்டேன். ஒருநாள் கஷ்டப்பட்டு வந்து பாஸ்டரை பார்த்து ஜெபிக்க கூறினேன். வீடு வந்து ஜெபித்து சென்றதோடு ஜெப எண்ணெய்யை பயன்படுத்த கூறி ஜெபித்துக் கொடுத்தார். பயன்படுத்தி வந்தேன். தேவன் ஆரோக்கியத்தை கொடுத்து சாட்சியாக என்னை சபையில் நிறுத்தியுள்ளார். சுகம் கொடுத்து சாட்சியாக ஜீவனுள்ள என்னை சபையில் நிறுத்தியுள்ளான். சுகம் கொடுத்த தேவனுக்கு நன்றி. ஜெபித்த பாஸ்டருக்கும் நன்றி.

**சகோதரி. கலா** - வேலூர்.

## தேவபார்வையும் ஊழியரின் கண்களும்

என் பெயர் பவுல். நான் போளூரில் உள்ளேன். அங்கு வீடு கட்டவும், முக்கியமாக போர்வெல் போடவும் தீர்மானித்தேன். எங்கள் ஊழியர் வேலூரில் உள்ளார். அடிக்கடி அவர் சொல்வது எங்கள் மனதை தொட்டது உண்டு. அதாவது “தேவ பார்வையிலிருந்து நான் பார்க்கிறேன்” என்பார். அவர் வெளிப்படுத்திய நீர் ஊற்றுகளில் உள்ள இடத்தில் Bore போட்டு தண்ணீர் கிடைக்காத இடமே கிடையாது. அவர் இருக்கிற இடத்திலிருந்தே தேவதரிசனம் பெற்று, வரைப்படம் வரைந்து கொடுத்த இடத்தில் போர்போட்டோம். என் வீடு, காலிமனை, தெருவிலிருந்து 5 அடி, நீளத்தில் 3 அடி உள்ளே தள்ளியும் Guide பண்ணினார். பாறைகள் நிறைந்த பகுதியில் தேவன் சொன்னது போலவே 27 அடியிலே, தண்ணீர் புறப்பட்டது. 55 அடியிலே Pressure அதிகமாகி போர் போட இயலாதபடி ஊற்றுக்கண் திறக்கப்பட்டது.

இது சம்பந்தமாக, கள்ளகுறிச்சி, காஞ்சிபுரம், வேலூர் பகுதிகள்

அநேகர் சபையில் கூறிய சாட்சிகளை தொடரந்து பாஸ்டரை அணுகி போன் மூலம் தொடர்பு கொண்டேன். என் கண்கள் வியந்தது. தேவனை மகிமைப்படுத்துகிறேன். பாஸ்டருக்கு நன்றி.

**சகோ. பவுல்** - போளூர்.

## மாற்றியமைப்பவர்

என் பெயர் ஜூலியா வில்லியம்ஸ். என்னுடைய காலில் Operation செய்து நடக்க கஷ்டப்படேன். Physiotherapy கொடுத்தார்கள். நானும் சில பயிற்சிகளை செய்தேன். நடக்க இயலாமல் கஷ்டப்பட்டேன். ஏற்கனவே என் Spinal Cord-ல் Fracture இருந்ததாலும், ஒரு Nerve வெளியே வந்து, அழுத்தம் ஏற்பட்டதால் வலியும் வேதனையும் காணப்பட்டது. Spinal Operation செய்ய வேண்டும் என்றார்கள். நானும் என் பிள்ளைகளும் வேண்டாம் என்று கூறி பாஸ்டர் அவர்களிடம் கூறி ஜெபித்தோம். மீள மருத்துமனைக்கு போனேன். Xray, MRI எடுத்த போது, Doctor Operation தேவையில்லை என்று கூறிவிட்டார்கள்.

மேலும் என் தொண்டையிலும் வேதனை காணப்பட்டு கஷ்டப்பட்டேன். ஏற்கனவே Cancer இருந்து Operation செய்து இரண்டு ஆண்டாகிறது. இருப்பினும் CAவாக இருக்குமோ என்று பயந்தேன். அநேக சோதனைகள் நடத்தப்பட்டு, Cancer Symptoms ஏதுமில்லை என்று கூறி அல்சருக்கான மருந்து கொடுத்து அனுப்பிவிட்டார்கள். இப்போது சுகமாக உள்ளேன். தேவனுக்கு மகிமை உண்டாவதாக. ஜெபித்த பாஸ்டருக்காக நன்றி. ஜெபித்த யாவருக்கும் நன்றி.

**சகோதரி ஜூலியா வில்லியம்ஸ்** - வேலூர்.


# Giftso - 2024

தலைப்பு : **எதுதான் நடக்கும் ?**

**"மனுஷனுடைய திட்டமா? தேவனுடைய சித்தமா?**

**இடம் : R.N. பங்ஷன் பேலஸ், வேலூர்**

**நாள் : 02.08.24 - 04.08.2024**

**நேரம் : 6.30 p.m. to 8.30 p.m.**

**வாருங்கள் ! பங்கு பெறுங்கள் !**

**பயனடையுங்கள்.**

## சென்றஇதழுக்கு சரியான விடையளித்தவர்கள்

### சகோதரிகள்

1. Sr. Jeyaseeli Jayaraj - Lalgudi
2. Sr. Sheki- a Nallamuthu - Vellore
3. Sr. Maria Arputham - Trichy
4. Sr. Therasa Edward - KGF
5. Sr. Meera Pa- dia- - Trichy
6. Sr. HepzibahThomas - Padappai
7. Sr. Nadhya - Voorhes College,Vellore
8. Sr. G- a- akalaiarasi - Voorhees College
9. Sr. K. Preethi - Vellore
10. Sr. Gracy Ithra - Vellore
11. Sr. Alice Augusti- e - Vellore
12. Sr. Beulah Joh- - Vellore

### சகோதரர்கள்

1. Bro. Abraham - Vellore
2. Bro. Chidambaram - Vellore
3. Bro. A- a- d, E.B. - Vellore
4. Bro. C. Edward - Vellore
5. Bro. Yesudoss - Voorhes College Vellore
6. Bro. Godwi- Premkumar - Voorhes College Vellore

### கடந்த இதழின் கேள்விகளுக்கு சரியான விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அப். | 28 : 6 | 11. | அப். | 17: 10,11 |
| 2. | அப். | 17 : 6 | 12. | அப். | 25 : 7 |
| 3. | அப். | 24 : 26 | 13. | அப். | 16 : 3 |
| 4. | அப். | 21 : 35 | 14. | அப். | 18 : 10 |
| 5. | அப். | 27 : 37 | 15. | அப். | 22 : 21 |
| 6. | அப். | 16 : 30 | 16. | அப். | 17 : 26 |
| 7. | அப். | 18 : 3 | 17. | அப். | 19 : 13 |
| 8. | அப். | 26 : 32 | 18. | அப். | 20 : 9 |
| 9. | அப். | 15 : 1 | 19. | அப். | 17 : 18 |
| 10. | அப். | 23 : 11 | 20. | அப். | 26 : 28 |

### அவசர ஜெப உதவிக்கு

"ஜெபக்குறிப்புகளை, கடிதங்களை அனுப்ப மற்றுமொரு வாய்ப்பு"

**E-Mail : pastorvictorvimalcga@gmail.com**

# 'தேடுங்கள் கண்டடைவீர்கள்'

(ரோமாபுரியாருக்கு எழுதின நிரூபம் 1ம் அதிகாரத்திலிருந்து 10 அதிகாரம் வரை உள்ள பகுதியிலிருந்து எடுக்கப்பட்டவை)

1. தேவனுடைய வல்லமையை யாரிடத்தில் காண்பிக்கும்படி யாரை நிலை நிறுத்தினார் ?
2. எதை சார்ந்தவர்களுடைய விசுவாசமும், வாக்குத்தத்தமும் வீணாய்ப்போம்?
3. சரீரத்தின் செய்கைகளை எதினால் அழித்தால் பிழைப்பீர்கள் ?
4. தேவனுடைய மகிமையை எதற்கு ஒப்பாக்கினார்கள் ?
5. பாவம் மேற்கொள்ளாமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும் ?
6. உக்கிர கோபாக்கினை யார் மேல் வரும் ?
7. கீழ்படியாதவர்களும் எதிர்த்து பேசுகிற ஜனங்கள் யார்?
8. பாம்பின் விஷம் எங்கே இருக்கிறது ?
9. எதனால் பாவம் இன்னதென்று அறிந்துக் கொண்டார்கள் ?
10. கிருபை எங்கே எப்பொழுது பெருகிற்று ?
11. எது கடனாக என்னப்பட்டது ?
12. எதை நம்பினால் பொருமையோடு காத்திருக்க வேண்டும்?



## ‘கேளுங்கள் கொடுக்கப்படும்’ என்றதாலோ ..... ? !

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே !

26 ஆண்டுகளாக தடையின்றி இப்பத்திரிகையை நடத்த தேவன் கிருபை பாராட்டுகிறார். அநேகருக்கு இலவசமாகவே பிரதிபலன் பாராது அனுப்பி வைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்த்தரிடத்திலிருந்து இலவசமாய் பெற்ற சத்தியங்கள்தான். Printing Press, Postal Charges இலவசமில்லையே ! சந்தா என்று ரூ. 50/- நிர்ணயிக்கப்பட்டு ஒவ்வொரு பத்திரிகையிலும் குறிப்பிடுகிறோம். கொடுப்பவர்கள் மிகச் சிலரே. விலைவாசி உச்சக்கட்டத்தில் உள்ள இந்த காலகட்டத்தில் ரூ.50/- என்பது least amou- t இதைக் குறித்து ஞாபகப்படுத்தினால் மட்டுமே அனுப்பும் சில விசுவாச மக்கள் உண்டு.

அன்பானவர்களே ! இதுவரை காணிக்கை கேட்டு பத்திரிகையிலோ, T.V. யிலோ நான் எழுதியதில்லை ; பேசியதில்லை என்பது என் சபை மக்களுக்கும் பத்திரிகை வாசகர்களாகிய உங்களுக்கும் தெரியும் ‘கேளுங்கள் கொடுக்கப்படும்’ (மத். 7:7) என்றதால் கேட்டால் பார்த்துக் கொள்ளலாம் என்றிருக்கிறீர்களோ ! வீடு தேடி வரும் பத்திரிகையைப் பற்றி சிந்தியுங்கள் ; பாரங்கொள்ளுங்கள் ; செயல்படுங்கள்.

***‘நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ***
***அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்’***

- (லூக்-6:38)

இப்படிக்கு,
ஆசிரியர்

## ஆராதனை நிகழ்ச்சிகள் (Online Program)

| | |
|---|---|
| காலை தியானம் | ஒவ்வொரு 1 ஆம் தேதி காலை 5 am - 6 am |
| பிரதி ஞாயிறு ஆராதனை | 9 am - 11.30 am |
| பிரதி ஞாயிறு மாலை | ஊழியருடன் ஒருமணி நேரம் 7.00 pm - 8.30 pm |
| பிரதி புதன் | வேதபாடக் கூட்டம் 7.30 pm - 8.30 pm |
| பிரதி வெள்ளி | சகோதரிகள் கூட்டம் 10.00 am - 12.00 -oo- |
| 2வது சனிக்கிழமை | உபவாசக் கூட்டம் 10.00 am - 2.00 pm |
| 3வது வெள்ளிக்கிழமை | முழு இரவு ஜெபம் 10.00 pm - 2.00 am |
| 4வது சனிக்கிழமை | காத்திருப்புக் கூட்டம் 7.00 pm - 8.30 pm |